30 வீரர்களுக்கு ரூ.40½ லட்சம் விளையாட்டு போட்டி உதவிகள்: உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, அக்.30–

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 29 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.31.95 லட்சத்திற்கான காசோலைகள், ஒரு சைக்கிள் பந்தைய வீரருக்கு ரூ.8.60 லட்சம் மதிப்பிலான அதிநவீன பந்தைய சைக்கிள் என மொத்தம் 30 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.40 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கான விளையாட்டு போட்டிகளுக்கான உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து, சீனாவில் வருகின்ற டிசம்பர் 1 முதல் 7–ந் தேதி வரை நடைபெறவுள்ள 4–வது உலக ஜூனியர் சாப்ட் டென்னிஸ் போட்டியில் (சிறுவர் மற்றும் சிறுமியர்) கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ள 24 வீரர், வீராங்கனைகளுக்கு போட்டிக்கான செலவினமாக தலா ரூ.1 லட்சம் வீதம் 24 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தொடர்ந்து, தாய்லாந்து நாட்டில் 1.12.2024 முதல் 7.12.2024 வரை நடைபெறவுள்ள உலக திறன் விளையாட்டு இளைஞர் போட்டியில் கலந்து கொள்ள உள்ள 5 நரம்பியல் சார் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு விமான கட்டணம், தங்குமிட செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்கான மொத்த செலவுத்தொகை 7 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

தூத்துக்குடியைச் சேர்ந்த சைக்கிளிங் விளையாட்டு வீரர் சூர்யபிரகாஷ் தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் அவருக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து பந்தய சைக்கிள் வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி பரிந்துரை செய்திருந்தார்.

இன்றைய நிகழ்வில் சைக்கிளிங் விளையாட்டு வீரர் சூர்யபிரகாஷ்க்கு ரூ.8 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிளை துணை முதலமைச்சர் இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இறுதிச் சடங்கு உதவித்தொகை வழங்க லஞ்சம்: வட்டாட்சியர் உள்பட 2 பேருக்கு 3 ஆண்டு சிறை

உதகை நீதிமன்றம் உத்தரவு

உதகை, அக். 30–

இயற்கை மரண இறுதிச் சடங்குக்கான உதவித் தொகையை வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் வட்டாட்சியர் உள்பட 2 பேருக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதித்து உதகை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நீலகிரி மாவட்டம் குந்தா தங்காடு பகுதியைச் சேர்ந்தவர் நாராயணன், இவர் உதகையில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தார். உதகை நொண்டிமேடு பகுதியில் தங்கியிருந்தார். இந்நிலையில், இவருடைய தந்தை ஆலுகுட்டி இயற்கை மரணம் அடைந்தார். இதனால் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், இயற்கை மரணம் மற்றும் இறுதி சடங்கு செலவு உதவித்தொகை வாங்குவதற்காக, குந்தா வட்டாட்சியர் அலுவலகத்தில், நாராயணன் விண்ணப்பம் கொடுத்தார்.

இந்த மனுவுக்கு தீர்வு சொல்லாமல் பல நாட்களாக இழுத்தடிக்கப்பட்டது. இதுகுறித்து பலமுறை நாராயணன் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் வந்து கேட்டும் சரியான பதில் கிடைக்கவில்லை. முடிவில் அப்போது அங்கு வட்டாட்சியராக பணியாற்றிய கனகம், தற்காலிக இளநிலை உதவியாளர் சாஸ்திரி ஆகியோர், பணம் கொடுத்தால் தான் பணி விரைவில் முடிக்கப்படும் என்று கூறி உள்ளனர். ஆனால், லஞ்சம் கொடுக்க விருப்பாத நாராயணன், இதுகுறித்து லஞ்ச ஒழிப்பு துறை போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸ் டிஎஸ்பியான சுதாகர், ஆய்வாளர் உன்னிகிருஷ்ணன் ஆகியோர் அறிவுறுத்தலின் பேரில் கடந்த 11.1.2010ம் ஆண்டு ரசாயனம் தடவிய ரூ.1000 பணத்தை வட்டாட்சியர் கனகத்துக்கும் ரூ.500 பணத்தை சாஸ்திரி ஆகியோருக்கும் நாராயணன் தந்துள்ளார். அவரிடமிருந்து இருவரும் பணத்தை வாங்கும் போது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீஸார் அவர்கள் இருவரையும் கையும் களவுமாக பிடித்தனர்.

3 ஆண்டுகள் சிறை; ரூ.10 ஆயிரம் அபராதம்

இதன்பின்னர் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கு விசாரணை உதகை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கில் அரசு தரப்பில் ரேணுகா கார்த்திகேயன் ஆஜராகி வாதாடினார். இந்த வழக்கில் இன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதன்படி, வட்டாட்சியர் கனகம் மற்றும் தற்காலிக இளநிலை உதவியாளர் சாஸ்திரி இருவருக்கும் 3 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி செந்தில்குமார் உத்தரவிட்டார். இதன் பின்னர் அவர்கள் இருவரும் கோவை மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர்.

அண்ணா தி.மு.க., வி.சி.க, கம்யூனிஸ்ட்டுகள் எதிர்ப்பு

கால்பந்து திடல்களை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை சென்னை மாநகராட்சி திரும்பப்பெற்றது

சென்னை, அக்.30

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கால்பந்து விளையாட்டுத் திடல்களை தனியாரிடம் பராமரிப்புக்கு வழங்கி, ஒரு மணி நேரம் விளையாட ரூ.120 கட்டணம் நிர்ணயம் செய்து, மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த முடிவை சென்னை மாநகராட்சி திரும்பப் பெற்றது.

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலகத்தில் நேற்று மேயர் பிரியா தலைமையில் அக்டோபர் மாதத்துக்கான மாதாந்திர மன்றக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 79 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அதில் ஒன்றாக சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள 9 கால்பந்து விளையாட்டுத் திடல்களை (செயற்கை புல்) தனியார் பராமரிப்புக்கு வழங்க முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்படி, வியாசர்பாடி முல்லைநகர், நாவல் ஆஸ்பத்திரி சாலை, திரு.வி.க.நகர் விளையாட்டு திடல், ரங்கசாய் விளையாட்டுத் திடல், கே.பி.பார்க் விளையாட்டுத் திடல், மேயர் சத்தியமூர்த்தி சாலையில் உள்ள அம்பேத்கர் விளையாட்டுத் திடல், கோடம்பாக்கம் அம்மா மாளிகை விளையாட்டு திடல், காமகோட்டி நகர் 6வது சாலை, சோழிங்கநல்லூர் ஓ.எம்.ஆர். சாலை ஆகிய கால்பந்து திடல்கள் ஒப்பந்தம் அடிப்படையில் வழங்கப்பட இருந்தது.

இந்த கால்பந்து மைதானத்தில் ஒரு நபருக்கு ஒரு மணி நேரத்திற்கு குறைந்தபட்சம் ரூ.120 கட்டணமாக நிர்ணயிக்கப்பட உள்ளது. 10 பேர் கொண்ட குழுவாக விளையாடும் பட்சத்தில் ஒரு மணி நேரத்துக்கு ரூ.1,200 கட்டணம் வசூலிக்கப்படும். மாநகராட்சியின் அரங்கத்துறையின் மூலம் டெண்டர் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதன் வாயிலாக மாநகராட்சிக்கு ஆண்டுக்கு 93.31 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும். அதாவது மைதானத்தை பராமரிக்கும் தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு ஆண்டுக்கு 2.3 கோடி கிடைக்கும் என கூறப்பட்டது.

இந்த நிலையில் கால்பந்து விளையாட்டுத்திடல்களை தனியாரிடம் வழங்க அண்ணா தி.மு.க. விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் கம்யூனிஸ்டு கட்சி கவுன்சிலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ரிப்பன் மாளிகையில் கால்பந்து விளையாடி மார்க்சிஸ்ட் கட்சி கவுன்சிலர்கள் நூதன முறையில் எதிர்ப்பு தெரிவித்தனர்.

சென்னை மாநகராட்சியின் கால்பந்து திடல்களை தனியாரிடம்

ஒப்படைக்கும் முடிவிற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து இந்த முடிவை திரும்ப பெறுவதாக இன்று மாநகராட்சி தெரிவித்துள்ளது.

நடிகர் அஜித்துக்கு உதயநிதி வாழ்த்து

சென்னை, அக். 30–

சர்வதேச கார் பந்தயத்தில் பங்கேற்கவுள்ள நடிகர் அஜித்குமாருக்கு தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் நடைபெறும் ஜிடி4 ஐரோப்பியன் சாம்பியன்ஷிப் உள்ளிட்ட சர்வதேச கார் பந்தயங்களில் நடிகர் அஜித்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்காக துபையில் நடிகர் அஜித்குமார் மற்றும் அவரது அணியினர் பயிற்சியில் ஈடுபடும் புகைப்படங்கள் சமீபத்தில் இணையத்தில் வைரலானது.

இந்த நிலையில் நடிகர் அஜித்குமாருக்கு வாழ்த்து தெரிவித்து உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:–

“உலக அளவில் சிறப்புக்குரிய 24எச் துபை 2025 அண்ட் தி ஐரோப்பியா 24 எச் சாம்பியன்ஷிப் – போர்ஷே 992 ஜிடி3 கோப்பை கார் பந்தயத்தில் பங்கேற்கவுள்ள நடிகரும், நண்பருமான அஜித்குமாருக்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நம்முடைய தமிழக விளையாட்டுத் துறையின் லட்சினையை ‘அஜித்குமார் ரேசிங்’ யூனிட்டின், கார், தலைக்கவசம் மற்றும் பந்தயம் தொடர்பான உபகரணங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். இதன்மூலம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறையை உலக அரங்கில் பெருமைப்படுத்தி, ஊக்குவித்துள்ள அஜித்துக்கு தமிழக விளையாட்டுத் துறை சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் – சென்னை பார்முலா 4 போன்ற முன்னெடுப்புகளை வாழ்த்திய அஜித்துக்கு எங்கள் அன்பும், நன்றியும். விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டை உலக அரங்கில் உயர்த்திட ஒன்றிணைந்து செயல்படுவோம். கார் பந்தய போட்டியில் வென்று தமிழ்நாட்டுக்கு நீங்கள் பெருமை சேர்த்திட வாழ்த்துகள் அஜித்” எனத் தெரிவித்துள்ளார்.

காவல் நிலையத்தில் தண்ணீருக்கு பதிலாக ஆசிட் கொடுத்த உ.பி. போதை போலீசார்

லக்னோ, அக். 30–

உத்தரப்பிரதேசத்தில் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்ட நபர், காவல்துறையினரிடம் குடிக்க தண்ணீர் கேட்டபோது, போதையில் இருந்த போலீசார் அவருக்கு ஆசிட் கொடுத்துள்ள சம்பவம் அரங்கேறிய நிலையில், மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உத்தரப்பிரதேசத்தில், சைட் நாக்லி காவல்நிலையத்திற்கு வெளியே இரண்டு குழுவாக மாணவர்கள் சண்டையிட்டு கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனை கண்ட பன்சுகா மிலாக் கிராமத்தில் வசிக்கும் தர்மேந்திர சிங் என்பவர், தான் நேரடியாக தலையிட்டு சண்டையை தணிக்க முயன்றதாக கூறப்படுகிறது. இதனை கண்ட காவல்துறையினர் தர்மேந்திரா உட்பட அங்கிருந்த அனைவரையும் கைது செய்து லாக்கப்பில் வைத்துள்ளனர்.

இந்த நிலையில்தான், தர்மேந்திரா காவல்துறையினரிடம் குடிக்க தண்ணீர் கேட்டுள்ளார். அப்போது, ஆசிட்டை கொடுத்துள்ளனர் போதையில் இருந்த காவலர்கள். தொடர்ந்து அதை குடிக்கும்படி தர்மேந்திராவை காவல்துறையினர் வற்புறுத்தியதாக தர்மேந்திராவின் சகோதரர் புஷ்பேந்திரா கூறியுள்ளார். நிர்ப்பந்தத்தால் அதை குடித்த தர்மேந்திரா, தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து மேலும் தெரிவித்த புஷ்பேந்திரா, "போலீஸ் லாக்அப்பில் என் சகோதரர் தர்மேந்திரா இருந்தபோது தண்ணீர் கேட்டுள்ளார். அப்போது, போதையில் இருந்த போலீசார் அவரை ஆசிட் குடிக்க வைத்துள்ளனர். இதனால், தற்போது எனது சகோதரரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஆசிட் குடிக்க வைப்பதற்கு முன்பு தர்மேந்திர சிங்கை போலீசார் கடுமையாக தாக்கியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். சம்பவத்தை தொடர்ந்து, தர்மேந்திராவை மீரட்டில் உள்ள மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

zதர்மேந்திராவின் உடல் நிலையில் குறித்து சோதித்த மருத்துவர்கள், "குடலில் அதிகப்படியான சேதம் ஏற்பட்டுள்ளது. அவரின் உடல்நிலை கவலைக்கிடமாகவே இருக்கிறது; வீட்டிற்கு அழைத்து சென்று விடுங்கள்" எனக் கூறியதாக தெரிகிறது.

இங்கிலாந்து மன்னர் சார்லஸ், மனைவிக்கு பெங்களூரில் புத்தாக்க சிகிச்சை

பெங்களூரு, அக். 30–

இங்கிலாந்து மன்னர் சார்லஸ், அவரது மனைவி கமிலா ஆகியோர் புத்தாக்க சிகிச்சைக்காக பெங்களூரு வந்துள்ளனர்.

கடந்த 27–ந்தேதி வந்த இவர்கள் பெங்களூரு சவுக்யா சர்வதேச சுகாதார மையத்தில் சிகிச்சை பெறுகின்றனர். தனிப்பட்ட பயணம் என்பதால், இது பற்றிய தகவல்கள் எதுவும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

யோகா பயிற்சி, புத்தாக்கப்பயிற்சி ஆகியவை இந்த மையத்தில் அரச குடும்ப தம்பதிக்கு அளிக்கப்படுகிறது. மையத்தில் வாக்கிங் செல்லும் தம்பதி, மற்ற நேரத்தில் இயற்கை வேளாண்மை வயல்களிலும், கால்நடை பண்ணையிலும் நேரத்தை செலவழிக்கின்றனர்.

டாக்டர் ஜான் மத்தாய் என்பவரால் வைட்பீல்டில் தொடங்கப்பட்ட இந்த மையத்தில் ஆயுர்வேதம், ஹோமியோபதி, யோகா, நேச்சுரோபதி சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. உடல் உபாதைகளுக்கு தீர்வு காண 30 வகையான தெரபிகளும் அளிக்கப்படுகின்றன.

மன்னராக சார்லஸ் இந்த மையத்துக்கு வருவது இது முதல் முறை என்றாலும், மன்னர் பதவி ஏற்பதற்கு முன் அவர் 9 முறை இங்கு வந்து சிகிச்சை பெற்றுள்ளார். இதே மையத்தில் அவர் மூன்று முறை தீபாவளி கொண்டாடியும் உள்ளார். ஒரு முறை பிறந்த நாளையும் கொண்டாடி உள்ளார். அவர்களுக்கு சிகிச்சை முடிந்த நிலையில் இன்று இரவு அவர்கள் லண்டன் திரும்புகின்றனர்.

பெயர் மாற்றம்

AJITH ABDUL REHMAN, S/O. ABDUL REHMAN, பிறந்த தேதி: 24/04/978, நெ. 33, ஜோன்ஸ் தெரு, மண்ணடி, சென்னை – 600 001. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **AJITH ABDUL RAHUMAN S/O. ABDUL RAHUMAN** என்று அழைக்கப்படுகிறேன்.

AJITH ABDUL REHMAN, S/O. ABDUL REHMAN

பெயர் மாற்றம்

MICHAEL ROSARIO, தந்தை பெயர்: Richard Rosario Pushparaj, பிறந்த தேதி: 17/08/2006, நெ. 179, S and P கார்டன், நொளம்பூர், சென்னை – 600 095. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MICHAEL ROSARIO RICHARD ROSARIO** என்று அழைக்கப்படுகிறேன்.

MICHAEL ROSARIO

பெயர் மாற்றம்

Old Given Name: Manogaran Saisatishkumar, Old Surname: :... ... தந்தை பெயர்: Manogaran Jankiraman, பிறந்த தேதி: 13/01/1992, நெ.62/61, செம்படதெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை – 600 015. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: SAISATISHKUMAR New Surname: MANOGARAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: Manogaran Saisatishkumar
Old Surname :... ...

பெயர் மாற்றம்

SAMYUKTHA T, பிறந்த தேதி: 22.07.2007, Jones Cassia Phase 2 Villa 66 கரணை மெயின் ரோடு, ஒட்டியம்பாக்கம், சென்னை – 600130. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **New Surname: OLANIYI, New Given Name: SAMYUKTHA TOKUNBO** என்று அழைக்கப்படுகிறாள்.

Tokunbo David Olaniyi,
தந்தை

மாண்பமை புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் சார்பு நீதிமன்றம் முன்பாக
AS NO:30/2006
IA.NO.98/2019

C.M.ராமசாமி
த/பெ.முத்துச்சாமி அம்பலம்.
கீரமங்கலம் வடக்கு,
கீரமங்கலம் அஞ்சல்,
ஆலங்குடி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.
... மனுதாரர்/மேல்முறையீட்டாளர்
/VS/
ஏகாம்பாள்
க/பெ.லேட். ஒப்பிலாமணி செட்டியார்
எண்:130.ராஜமன்னர் சாலை.
தியாகராய நகர்,
சென்னை – 600 072
...26ம் எதிர் மனுதாரர்/
உத்தேச எதிர் மேல்முறையீட்டாளர்

அறிவிப்பு

நான் மேற்படி வழக்கை மாண்பமை அறந்தாங்கி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்:338/1980ல் கடந்த 20.11.2013ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பானை மற்றும் தீர்புரையின் பேரில் இந்த மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் தாங்கள் **11.11.2024–**ம் தேதி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் காலை **10.30** மணிக்கு நேரில் ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவிக்கவும். தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கில் உங்களுக்கு எதிராக ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதனை இந்த அறிவிப்பின் மூலம் அறியவும்.

சோலை.முத்தையா.BA.,B.L.,
வழக்கறிஞர்.
புதுக்கோட்டை.

நேஷ்னல் பிளாஸ்டிக் டெக்னாலஜிஸ் லிமிடெட்

திரு காம்ளக்ஸ், 44, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.
(CIN:L25209TN1989PLC017413)

30-09-2024 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கை

ரூபாய் லட்சங்களில் (Except EPS)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2024	30.06.2024	30.09.2023	30.09.2024	30.09.2023	31.03.2024
		(த.ஆகாதது)	(த.ஆகாதது)	(த.ஆகாதது)	(த.ஆகாதது)	(த.ஆகாதது)	(த.ஆனது)
1	செயல்பாடுகளில் இருந்து வருமானம்	8,678.89	6,867.47	7,351.00	15,546.36	13,496.45	26,921.70
2	நடப்பு காலத்துக்கான நிகர லாபம் (நஷ்டம்) (வரி விலக்கு மற்றும் அல்லது சாதாரண அயிட்டங்களுக்கு முன்)	351.20	288.89	303.88	640.09	589.46	1,169.92
3	வரிக்கு பின் நடப்பு காலத்திற்கான நிகர லாபம் (நஷ்டம்) (வரி விலக்கு பெற்ற மற்றும் அல்லது சாதாரண அயிட்டங்களுக்கு பின்)	253.50	208.52	219.34	462.02	425.47	841.65
4	நடப்பு காலாத்திற்கான மொத்த விரிவான வருவாய் (வரிக்கு பின் கட்டுப்படுத்தாத வட்டி)	253.50	208.52	219.34	462.02	425.47	832.49
5	சமபங்கு மூலதனம் (செலுத்தப்பட்டது)	607.83	607.83	607.83	607.83	607.83	607.83
6	ரிசர்வுகள் மற்றும் இதர சமபங்கு (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)	4,101.81	3,918.27	3,293.56	4101.81	3,293.56	3,700.57
7	பங்கு ஒன்றின் வருவாய் சிறப்பு ரகங்களுக்கு முந்தையது மற்றும் பிந்தையது (முழுமையாக செலுத்தப்பட்ட தலா ரூ.10/.-) அடிப்படை மற்றும் திட்டம் குறைந்தது	4.17	3.43	3.61	7.60	7.00	13.85

குறிப்பு :
1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளின் 33-வது விதிமுறையின் கீழ். பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும், காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத மேற்குறிப்பிடப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கத்தின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளத்திலும் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளமான www.nationalgroup.in/investors-relations காணலாம்.
2. மேற்காணும் முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 29-10-2024 அன்று நடைபெற்ற கம்பனியின் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. கம்பெனியின் சட்டப்பூர்வ ஆடிட்டர்களின் குறிப்பிட்ட மறு ஆய்வுக்கு உட்பட்டது.
3. 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தில் 133வது பிரிவின் கீழும் 2015-ம் வருடத்திய கம்பெனிகள் (இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகள்) திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகளை (Ind AS) பின்பற்றி கம்பெனியின் நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
4. கம்பெனியானது வடிவமைக்கப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்திகள் என்ற வணிகபிரிவில் செயல்படுகிறது.
5. நடப்பு காலத்திற்கான பிரிவுகளை ஊர்ஜிதப்படுத்துவதற்காக தேவையான இடங்களில் முந்தைய காலாண்டு / ஆண்டுக்கான முடிவுகள் மறுபிரிவு செய்து காட்டப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
நேஷ்னல் பிளாஸ்டிக் டெக்னாலஜிஸ் லிமிடெடுக்காக
அரிஹந்த் பராக்
நிர்வாக இயக்குனர்
DIN : 07933966

இடம் : சென்னை
தேதி : 29-10-2024

KINGFA

கிங்பா சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்

CIN: L25209TN1983PLC010438

பதிவு அலுவலகம் : தன் பில்டிங், 3வது மாடி, 827, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி : +91-044-28521736.
பேக்ஸ் : +91-044-28520420. Email: cs@kingfaindia.com Website: www.kingfaindia.com

30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.09.2024	முடிந்த காலாண்டு 30.06.2024	முடிந்த ஆண்டு 31.03.2024
		(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்யாதது)	(தணிக்கை செய்தது)
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய்	41,937.07	41,810.18	149,076.42
2	காலத்திற்கான நிகர லாபம்(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	5,018.90	5,243.63	16,419.72
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	5,018.90	5,243.63	16,419.72
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	3,725.77	3,907.41	12,252.25
5	இதர விரிவான வருவாய்	-	-	6.11
6	காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருவாயை (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது	3,725.77	3,907.41	12,258.36
7	சம பங்கு மூலதனம்	1,211.05	1,211.05	1,211.05
8	இருப்புகள் (மார்ச் 31, 2024–ன் இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர)			57,646.54
9	ஒரு பங்கு சம்பாத்தியம் ஒவ்வொன்றும் ரூ.10/– (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)			
	(a) அடிப்படை	30.76	32.26	101.17
	(b) பலமிழந்தது	30.76	32.26	101.17

குறிப்புகள்:
1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. மேற்கண்ட நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.kingfaindia.comல் உள்ளது.
2. மேற்கூறிய முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அக்டோபர் 29, 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அதன் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் செப்டம்பர் 30, 2024–ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான முடிவுகளில் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.
3. திருத்தப்பட்ட நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 133–ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2015 (இந்த் ஏஎஸ்) மற்றும் செபியின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015–ன் ஒழுங்குமுறை 33–ன் கீழ் மற்றும் திருத்தப்பட்ட விதிகள் மற்றும் மார்ச் 29, 2019 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண். CIR/CFD/CMD1/44/2019 ஆகியவற்றின்படி மேற்கண்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
4. வரிச் செலவுகளில் தற்போதைய வரி மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி ஆகியவை அடங்கும்.
5. நிறுவனத்தின் வணிகமானது இந்த் ஏஎஸ் – 108–ன் நோக்கத்திற்காக "வலுவூட்டப்பட்ட பாலிப்ரோபிலீன்" என்ற ஒற்றை அறிக்கையிடக்கூடிய முதன்மைப் பிரிவின் கீழ் வருகிறது.

கிங்பா சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி (இந்தியா) லிமிடெட்
போ ஜின் ஜென்
நிர்வாக இயக்குனர்
DIN: 06617986

இடம் : புனே
தேதி : அக்டோபர் 29, 2024

ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058. தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 இன் விதிமுறை 29 உடன் படிக்கப்பட்ட விதிமுறை 47ன்படி, செப்டம்பர் 30, 2024 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள் மற்றும் இடைக்கால ஈவுத்தொகை ஏதேனும் இருந்தால் அவற்றைப் பரிசீலித்து பதிவு செய்ய நவம்பர் 8, 2024 வெள்ளிக்கிழமை அன்று காணொளிக்காட்சி முறையில் (VC Mode) நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது.

SEBI (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 இன் விதிமுறை 42 இன் படி, பங்குதாரர்களின் இடைக்கால ஈவுத்தொகையை ஏதேனும் இருந்தால், அது வழங்குவதற்கான உரிமையை நிர்ணயிப்பதற்கான பதிவு தேதியை நிறுவனம் பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.

அடையாளம்	பங்கு வகை	பதிவு தேதி	நோக்கம்
NSE: ESABINDIA BSE: 500133	சம பங்கு	20 நவம்பர், 2024	இடைக்கால கட்டணத்திற்காக ஈவுத்தொகை, ஏதேனும் இருந்தால் 2025 மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடையும் ஆண்டு

அனைத்து தகவல்களும் நிறுவனத்தின் இணையதளம் www.esabindia.com மற்றும் பங்குச் சந்தையின் BSE Limited www.bseindia.com மற்றும் The National Stock Exchange of India Limited www.nseindia.com ஆகியவற்றில் கிடைக்கும்.

இயக்குனர் குழுவின் சார்பாக
G. பாலாஜி
நிறுவன செயலாளர்

சென்னை
29 அக்டோபர், 2024

டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்

CIN: L74210TN1986PLC012791

பதிவு அலுவலகம்: எண். 67, பழைய எண். 28–ஏ, கதவு எண். G–3, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.
TELEPHONE +91 44 42030149, FAX +91 44 24328452
Website : www.tcms.bz; e-mail: invesotrs@tcms.bz

அறிவிப்பு

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 29 (1) (ஏ)ன்படி கீழ்க்கண்டவை குறித்து பரிசீலிப்பதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் **வியாழக்கிழமை, 07 நவம்பர், 2024 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறுகிறது** என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

1. 30 செப்டம்பர், 2024–ல் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்தல்.

கம்பெனியின் இணைய தளம் www.tcms.bz மற்றும் மும்பை ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா, மும்பை இணையதளம் www.nseindia.comல் இந்த அறிவிப்பு உள்ளது.

குழுவின் ஆணைப்படி
டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
A.V.M. சுந்தரம்
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி : 29 அக்டோபர், 2024